நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## STC. No. 1761 /2025

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(புகார்தாரர்தரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராணி |
| தந்தை / கணவர் பெயர் | : | வெங்கடாஜலம் |
| கிராமம் | : | கூலிலைன் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 54 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 06–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.20 PM.

1. நான் செய்யும் தேங்காய் வியாபாரத்தில் சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ. 3000/– வரை கிடைக்கும். தொழில் சம்பந்தமாக வங்கியில் வரவு செலவு செய்வதில்லை. ரொக்கமாகத்தான் வாங்குவேன். நான் வருமானவரி எதுவும் செலுத்துவதில்லை. எதிரியை தவிர வேறு யாருக்கும் கடன் கொடுக்கவில்லை.

ரூ.20,000/—க்கு மேல் பணம் வரவு செலவு செய்தால் வங்கி கணக்குமூலமாகதான் செய்யவேண்டும் என்ற நடைமுறை எனக்கு தெரியாது.

2. எதிரியின் தாயார் தமிழரசி என்பவரை தெரியும். எனது அப்பா வகையில் அக்கா உறவு முறை ஆவார். இதற்கு முன் தமிழரசி என்பவரிடம் பணம் கொடுக்கல் வாங்கல் எதுவும் கிடையாது. நான் சொல்வது தவறு என்றாலும், எதிரியன் தாயார் தமிழரசி ரூ.5,00,000/—க்கு என்னிடம் அடமானம் கடன் பத்திரம் எழுதி கொடுத்து ரூ.5,00,000/— கடன் வாங்கியிருந்தார் என்றாலும், அந்த தொகைக்கு ஆதரவாகத்தான் எதிரி இந்த வழக்கு காசோலையை கொடுத்தார் என்றாலும், எதிரி தனிப்பட்ட முறையில் என்னிடம் கடன் வாங்கவில்லை என்றாலும், அந்த ஆவணத்திற்கான முழு தொகையும் பெற்றுக்கொண்டு மேற்படி எழுதி கொடுத்த அடமான பத்திரத்தை எதிரியிடம் நான் ஒப்படைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் கடன் பத்திரம் நான் எழுதி கொடுத்தது அல்ல.

3. எதிரி கூலி தொழிலாளி என்றாலும், ஆட்டோவை தவிர வேறு எந்த சொத்தும் அவருக்கு இல்லை என்றாலும் சரிதான். உறவினர் என்ற முறையில் நம்பி பணம் கடன் கொடுத்தேன். வீட்டில் இருந்த பணத்தைதான் எதிரிக்கு கொடுத்தேன். எனது அம்மாவின் வீடு திருச்சிக்கு பக்கத்தில் பெட்டவாய்தலை ஊரில் உள்ளது. அதற்கு பக்கத்தில் தான் எதிரியின் வீடும் உள்ளது. நான் எனது அம்மாவின் வீட்டிற்கு போயிருந்த சமயம் எதிரி அங்கு வந்து பணம் கேட்டார்.

4. 2 மாதத்தில் எதிரி பணத்தை திருப்பி தருவதாக சொன்னார். வட்டி எதுவும் நான்கேட்கவில்லை. 2 மாதம் கழித்து எதிரி என்னிடம் வந்து ஜுன் மாத கடைசியில் காசோலையை கலக்ஸ்னுக்கு போட்டு பணத்தை எடுக்க சொல்லி காசோலையை கொடுத்து சென்றார். காசோலையை வாங்கும் சமயத்தில் சாட்சிகள் யாரும் இல்லை. பணம் கொடுக்கும்போதும் சாட்சிகள் யாரும் இல்லை.

5. காசோலையில் விவரங்களை பூர்த்திசெய்து கொண்டு வந்து என் முன்னிலையில் காசோலையில் கையெழுத்து செய்தார். விவரங்களை பூர்த்தி செய்தது யார் என்று எனக்கு தெரியாது. எதிரிக்கு 10,000,00/—ம் பணம்

கொடுத்ததற்கு வேறு எந்த ஆவணங்களையும் நான் எழுதி வாங்கவில்லை. நம்பிக்கையின் பேரில் தான் கொடுத்தேன்.

6. ஆட்டோவை ரிப்பேர் செய்வதற்காகவும் கடன் இருப்பதாகவும் , சொல்லி சொந்த செலவுக்காக என்னிடம் கடன் வாங்கியிருந்தார். காசோலை திரும்பிய பிறகு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். எதிரியை நான் நேரடியாக தொடர்பு கொள்ளவில்லை. எதிரிக்கு நான் பணம் கொடுக்கவில்லை என்றாலும், எதிரியின் தாயாருக்கு பணம் கொடுத்ததற்காக எதிரி பாதுகாப்புக்காக காசோலையை கொடுத்தார் என்றாலும், அந்த காசோலையை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரியின் தாயார் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்துவிட்டார் என்றாலும், சரியல்ல.

7. எதிரியின் தாயார் எனக்கு பணம் செலுத்துவதற்காக உறவினரிடம் தான் பணத்தை கடன் வாங்கி எனக்கு திருப்பி கொடுத்தார் என்றால் சரியல்ல.

.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.50 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**